<u>19 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம்,</u>
<u>எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 3.</u>

தேதி 05.12.2025

| | | |
|---|---|---|
| சுருக்கு வழக்கு எண் | – | 4177/2024 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | பு.த.சா. 1 |
| பெயர் | – | சுகன்யா |
| தந்தை பெயர் | – | ரமேஷ் |
| வயது | – | 29 |

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 05.12.2025 நான் திருமதி. லஷ்மி இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரண</u>** (எதிரி மனுவின் பெயரில் ஆஜரில்லை. இருதரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

1) இந்த வழக்கினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எத்தனையாவது முகவராக நியமிக்கப்பட்டு வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் 3 வதாக நியமிக்கப்பட்டுள்ளேன். புகாரினை தாக்கல் செய்ய முகவர் தற்போது வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். இந்த வழக்கு எந்த தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. வழக்கை தாக்கல் செய்த முகவர் வழக்கறிஞராக இருந்து கொண்டே வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. எங்கள் நிறுவனம் RBI வரையறைக்குள் தான் இயங்குகிறது என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்திற்கு திருச்சியில் கிளை உள்ளதா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தின் விற்பனை பிரதிநிதிகள் திருச்சியில் உள்ளார்களா என்றால்

இல்லை. திருச்சியில் கிளை இல்லாதபோது திருச்சியில் இருந்து வந்து சென்னை அலுவலகத்தில் லோன் கேட்டார்கள் என்றால் இல்லை. கும்பகோணம் கிளையை அணுகி லோன் கேட்டுள்ளார்கள். லோன் விண்ணப்பத்தில் எதிரி சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் எதிரியின் விவரங்கள் குறிப்பிட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த விண்ணப்பத்தை பரிசீலித்து தான் லோன் வழங்குவோம் என்றாலும் அவ்வாறு தான் இந்த வழக்கிலும் விண்ணப்பத்தை பரசீலித்து கடன் வழங்கினோம் என்றால் சரிதான். அந்த லோன் sanction letter ஐ தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. அதனை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

2) அந்த லோன் sanction letter ல் எவ்வளவு லோன் வழங்கப்பட்டுள்ளது என்றும் தவணை தொகை எவ்வளவு என்றும் எத்தனை தவணைகள் என்றும் எதிரியிடமிருந்து பொறுப்புறுதிக்காக என்ன வாங்கினோம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் எதிரிக்கு வழங்கப்பட்ட லோன் sanction letter என்றால் ஆமாம். அந்த லோன் sanction letter நகல் **எதசாஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எதிரி தரப்பில் sanction letter நகல் தான் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.) புதசாஆ– 5 ல் unsecured business loan என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் ஆனால் எதசாஆ–1 ல் 7 வது பாயின்டில் பொறுப்புறுதிக்காக 2 பின் தேதியிட்ட காசோலைகள் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி செக்யூரிட்டி காசோலைகளின் எண்கள் சொல்லமுடியுமா என்றால் தெரியாது. அந்த காசோலைகளை இந்த நீதிமன்றத்தில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியாது.

3) புதசாஆ–3ல் எதிரி தான் காசோலைகளை கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் எதிரி தான் காசோலையை கொடுத்தார். எதிரி செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலையில் ஒன்றினை நிரப்பி தான் இந்த வழக்கினை நாங்கள் தாக்கல் செய்துள்ளதால் தான் செக்யூரிட்டி காசோலையை எங்களால் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது என்று பதில் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்து காட்டி சரி என்று அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது,

Mrs. P. Magalakshmi, M.L.,
XIX Metropolitan Magistrate,
Egmore @ Allikulam, Chennai–03.